RNI-NO: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 235 | ஆகஸ்டு 30, 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தி.மு.க. முப்பெரும் விழாவில் 110 மாவட்ட பொறுப்பாளர்கள் அறிமுகம்: மு.க.ஸ்டாலின் அதிரடி திட்டம்



சென்னை, ஆக.30-

தி.மு.க. முப்பெரும் விழாவில் 110 மாவட்ட பொறுப்பாளர்களையும் அறிமுகம் செய்ய, கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார்.

**மாவட்ட செயலாளர்கள் 110 ஆக உயர்வு**

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. அடைந்த தோல்விக்கு காரணங்கள் குறித்து ஆராய குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்த குழுவினர் அளித்த அறிக்கையின் அடிப்படையில், தி.மு.க.வை வலுப்படுத்த 77 ஆக இருந்த மாவட்ட செயலாளர்களின் எண்ணிக்கையை 110 ஆக உயர்த்த கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் முடிவு செய்தார்.

அதன்படி, நேற்று கட்சி ரீதியாக தி.மு.க.வில் பிரிக்கப்பட்ட 110 மாவட்டங்கள் எவை? என்பதும், அதில் என்னென்ன சட்டமன்ற தொகுதிகள் இடம்பெற்றுள்ளன? என்பதுவும் வெளியானது.

**மாவட்ட செயற்குழு கூட்டம்**

தற்போதுள்ள 77 மாவட்ட செயலாளர்கள், புதிதாக உதயமாகும் 110 மாவட்டங்களில், எந்தெந்த ஒன்றியம், நகரம், பேரூர் பகுதிகள் இடம்பெற வேண்டும் என்பது குறித்து மாவட்ட செயற்குழுவை கூட்டி, அதற்கான பரிந்துரைகளை 15 நாட்களுக்குள் கட்சித் தலைமைக்கு அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுவாக, தி.மு.க.வில் மாவட்ட செயலாளர்கள், கட்சி தேர்தல் நடத்தியே நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அதற்கு முன்பாக குறிப்பிட்ட மாவட்டத்தை கவனிக்க பொறுப்பாளர்கள் தான் நியமிக்கப்படுவார்கள். தேர்தல் மூலம் மாவட்ட செயலாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை பொறுப்பாளர்களே நிர்வகிப்பார்கள்.

**தி.மு.க. முப்பெரும் விழாவில் அறிமுகம்**

அந்த வகையில், தி.மு.க.வில் புதிதாக உதயமாகியுள்ள 110 மாவட்டங்களுக்கும் விரைவில் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். அவர்கள் அனைவரையும் செப்டம்பர் 17-ந் தேதி நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் அறிமுகம் செய்து வைக்க, கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார். முப்பெரும் விழா நடைபெறும் இடம் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

## ஜல்லிக்கட்டை இழிவாகப் பேசினாரா தவெக எம்எல்ஏ? - அமைச்சர் நிர்மல் குமார் மறுப்பு



மதுரை: ஆக.30-

"திமுக ஆட்சியில் கலைஞர் பெயரை சூட்டுவதற்காகவே ஜல்லிக்கட்டு ஸ்டேடியம் கட்டினர். ஜல்லிக்கட்டு என்பது பொழுதுபோக்கல்ல, உணர்வு சம்பந்தப்பட்டது. அத்தகைய உணர்வுப்பூர்வமான விளையாட்டை ஸ்டேடியம் கட்டி ஜல்லிக்கட்டு நடத்தி திமுக இளைஞர்களை தவறாக வழிநடத்தியது என்றே சோழவந்தான் தொகுதி எம்எல்ஏ சட்டப்பேரவையில் கூறினார். அதற்குள் மைக் ஆஃப் ஆகிவிட்டது" என்று அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் குடமுழுக்கு விழா தொடர்பாக அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் இன்று மீனாட்சி அம்மன் கோயிலில் ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்பு செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "திமுக ஆட்சியில் மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்களின் உறவினர்களையே அறங்காவலர்களாக நியமித்து பதவி தந்துள்ளனர். தவெக ஆட்சியில் அதெல்லாம் நடக்காது. உண்மையான பக்தர்கள், கோயிலுக்காக பணியாற்றுபவர்களையே அறங்காவலர்களாக தேர்வு செய்யவுள்ளோம்.

தவெக ஆட்சியில் திமுக மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்களின் உறவினர்கள் யாரும் குழுவில் இருக்க முடியாது. திமுகவினருக்கும் கோயிலுக்கும் என்ன சம்பந்தம்? கோயில்கள் தனி நபர்களுக்கு சொந்தம் கிடையாது.

தனி நபர்கள் கோயிலில் அரசியல் செய்யக் கூடாது. மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா அழைப்பிதழில் அறங்காவலர்கள் குழு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அறங்காவலர்கள் பெயர் இல்லை என கேட்க யாருக்கும் அதிகாரம் கிடையாது.

கோயில் விவகாரத்தில் அரசியல் செய்யக் கூடாது. மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடத்தியுள்ளோம். பாரபட்சமின்றி அனைவருக்கும் பொதுவான விழாவாக நடைபெறும். மாநகராட்சி சார்பில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒருவாரத்துக்குள் அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து செயல்படும் திட்டம் உருவாக்கப்படும். செப்.11 முதல் முன்னேற்பாடு பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிடும். உள்ளூர் விடுமுறை விடுவது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது.

தவெக நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளோம். யாருக்கும் பயந்தோ, யாருடனும் சமரசம் செய்வது கிடையாது. பரந்தூர் விமான நிலையத்தில் கையகப்படுத்தப்பட்ட விவசாயிகளின் நிலங்களை ஒப்படைப்பது குறித்து தமிழக முதல்வர் நல்ல முடிவெடுப்பார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் இருப்பைக் காட்டிக்கொள்ளவே தினமும் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். அவர் பேசுவது யாருக்காவது புரிகிறதா என்று சொல்லுங்கள். அவர்தான் ஓபிஎஸ் மாற்றிவிட்டு சசிகலாவை முதல்வராக்குங்கள் என்று சொன்னவர்.

அதிமுக 80 சதவீத அழிவுப்பாதைக்கு கொண்டு சென்றவர். தற்போது அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை நீக்கிவிட்டு தன்னை பொதுச் செயலாளராக்குங்கள் என இன்னும் ஆறுமாதத்தில் கேட்பார்.

திமுக ஆட்சியில் கலைஞர் பெயரை சூட்டுவதற்காகவே ஸ்டேடியம் கட்டினர். அவனியாபுரம், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக்கு என கலாச்சாரம் உள்ளது. ஜல்லிக்கட்டு என்பது பொழுதுபோக்கல்ல, உணர்வு சம்பந்தப்பட்டது. அத்தகைய உணர்வுப்பூர்வமான விளையாட்டை ஸ்டேடியம் கட்டி ஜல்லிக்கட்டு நடத்தி திமுக இளைஞர்களை தவறாக வழிநடத்தியது என்றே சோழவந்தான் தொகுதி எம்எல்ஏ சட்டப்பேரவையில் கூறினார். அதற்குள் மைக் ஆஃப் ஆகிவிட்டது.

அதற்கு நான் விளக்கமளித்தது சட்டப்பேரவையில் இருந்த அனைவருக்கும் தெளிபடுத்தினேன். ஆனால் வெளியில் இதை திமுகவினர் தவறாக பரப்பிவருகின்றனர்.

தமிழக முதல்வர் விஜய், பிரதமர் பதவிக்கு போட்டியிடுவது குறித்து பேசவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை" என்று அவர் கூறினார்.

அதேவேளையில், "இளைஞர் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும், ஒரு கூண்டுக்குள் அடைக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் தான் கூறினேனே தவிர, தவறான உள்நோக்கம் கிடையாது" என்று தவெக எம்எல்ஏ கருப்பையா விளக்கம் அளித்துள்ளார்.எம்எல்ஏ தெரிவித்துள்ளார்.

இதனிடையே, "தமிழர்களின் பல்லாயிரம் ஆண்டுகாலப் பண்பாட்டு அடையாளமாகவும், வீரத்தின் வெளிப்பாடாகவும், நாட்டு மாடுகளைக் காக்கும் மரபின் நீட்சியாகவும் திகழும் ஏறுதழுவுதல் எனும் ஜல்லிக்கட்டு, இளைஞர்களைச் சீரழிக்கும் விளையாட்டு என்று தமிழ்நாடு சட்டப்பேரவையிலேயே சோழவந்தான் சட்டப்பேரவை உறுப்பினர் கருப்பையா பேசியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சாடியுள்ளார்.

அதேபோல், "தமிழர்களின் பாரம்பரியத்தோடும், பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்த வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகள் இளைஞர் சமுதாயத்தைச் சீரழிக்கின்றன என்ற சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கருப்பையாவி பேச்சு கடும் கண்டனத்துக்குரியது" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

## கோவை: வடமாநில தொழிலாளர்கள் குடியிருப்பில் தீ விபத்தால் வெடித்துச் சிதறிய 22 சிலிண்டர்கள்



கோவை: ஆக.30-

கோவையில் கட்டுமானப் பணியில் ஈடுபடும் வடமாநிலத் தொழிலாளர்கள் தங்கும் குடியிருப்பில் நேற்று (ஆக.29) ஏற்பட்ட தீ விபத்தில் அடுத்தடுத்து 22 சிலிண்டர்கள் வெடித்து சிதறின.

கோவை நவ-இந்தியா பகுதியில் பிஹார், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களை சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கி, கட்டுமானத் தொழிலில் பணியாற்றி வருகின்றனர். இங்கு இவர்கள் தங்க வசதியாக 75 தகர கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு கொட்டகையில் குறைந்தபட்சம் 5 பேர் வீதம் தங்கியிருந்து பணிக்கு சென்று வருகின்றனர்.

மேலும், இந்த தொழிலாளர்கள் சமையல் செய்து சாப்பிடுவதற்கு வசதியாக ஒரு கொட்டகைக்கு ஒரு கேஸ் சிலிண்டர் இருந்ததாக தெரிகிறது. இதில், சமையல் கேஸ் சிலிண்டர், வணிக கேஸ் சிலிண்டர், 5 கிலோ எடை கொண்ட கேஸ் சிலிண்டர்களும் அடங்கும்.

இந்நிலையில், இன்று வழக்கம் போல் தொழிலாளர்கள் வேலைக்கு சென்றிருந்தனர். ஒருசில தொழிலாளர்கள் மட்டும் அந்த கொட்டகையில் தங்கியிருந்ததாக தெரிகிறது. அப்போது நண்பகலில் சிலர் சமையல் செய்துள்ளனர். இதில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து அங்கிருந்தவர்கள் அந்த தீயை அணைக்க முயன்றனர். ஆனால், தீ பரவ தொடங்கியதால், அங்கிருந்த அனைவரும் அச்சமடைந்து வெளியே ஓடி வந்தனர்.

பின்னர், இதுகுறித்து கோவை தெற்கு தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் 3 தீயணைப்பு ஊர்திகளில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்றனர்.

மேலும், தீ கொளுந்து விட்டு எரிந்ததால் வெப்பம் தாங்காமல் அங்கிருந்த கேஸ் சிலிண்டர்கள் ஒவ்வொன்றாக வெடித்து சிதற தொடங்கியது.

கூடுதலாக பீளமேடு, கோவை வடக்கு ஆகிய தீயணைப்பு நிலையங்களில் இருந்து ஊர்திகள் வரவழைக்கப்பட்டன. சுமார் 2 மணி நேர போராட்டத்திற்கு பின் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த தீ விபத்தில் கொட்டகைகளில் இருந்த 22 சிலிண்டர்கள் வெடித்து சிதறி சேதமடைந்தன. மேலும், வெடிக்காத நிலையில் இருந்த 30 சிலிண்டர்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டன. தீ விபத்துக்கான காரணம் குறித்து பீளமேடு போலீஸார் விசாரிக்கின்றனர்.

## மு.க.அழகிரி மகன் தயாநிதியை மீண்டும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவு



மதுரை: ஆக.30-

முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி மகன் தயாநிதியை ஜிப்மர் மருத்துவமனையில் மீண்டும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த மதுரை சிபிஐ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை கீழவளவு காவல் நிலையத்தில் பதியப்பட்டுள்ள வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில், அமலாக்கத் துறை சுமார் ரூ.256.44 கோடி மதிப்பிலான சட்டவிரோதப் பணப்பரிவர்த்தனைத் தடைச் சட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் மகன் தயாநிதி மீது வழக்குப் பதிவு செய்தது.

விசாரணையின்போது, ஏற்கெனவே நரம்பியல் குறைபாடு மற்றும் பக்கவாதம் காரணமாக விசாரணையை எதிர்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக தயாநிதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சென்னை அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை அளித்த மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் தயாநிதி மீதான வழக்கு தனியாகப் பிரிக்கப்பட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், அமலாக்கத் துறை வழக்கு மதுரை சிபிஐ நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத் துறை வழக்கறிஞர் வாதிடுகையில், 'தயாநிதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற ஐபிஎல் கிரிக்கெட் போட்டியை நேரில் கண்டுகளித்த வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின.

மேலும், நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அவர் வாக்களித்து, அது தொடர்பான புகைப்படத்தையும் வெளியிட்டிருந்தார். இதிலிருந்து அவர் நலமுடன் இருப்பது தெரியவருவதால், புதுச்சேரி ஜிப்மர் அல்லது எய்ம்ஸ் மருத்துவக் குழு மூலம் அவருக்கு மீண்டும் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்' என்றார்.

தயாநிதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, நீதிமன்றத்தின் உத்தரவுப்படி மனநலக் குறைபாடு ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், சமூக வலைதளப் படங்களை வைத்து மீண்டும் மருத்துவப் பரிசோதனைக்கு உத்தரவிட முடியாது என்றும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட மதுரை கூடுதல் மாவட்ட மற்றும் சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.சண்முகவேல் பிறப்பித்த உத்தரவு:

கிரிக்கெட் போட்டியை நேரில் சென்று பார்ப்பதும், தேர்தலில் வாக்களிப்பதும் சாத்தியப்படும்போது, நீதிமன்றத்தில் ஆஜராகி விசாரணையை எதிர்கொள்வதில் என்ன தடை இருக்க முடியும்?

தயாநிதியின் தற்போதைய மனநிலை, புரிந்துகொள்ளும் திறன் மற்றும் உடல் தகுதியை புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஆய்வு செய்ய வேண்டும்.

ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர், முதன்மை மனநல மருத்துவர், கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட் மற்றும் முதன்மை நரம்பியல் வல்லுநர் அடங்கிய சிறப்பு மருத்துவக் குழுவை அமைத்து தயாநிதியை மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்.

தேவைப்பட்டால் தயாநிதியை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து ஆய்வு செய்யும் அதிகாரமும் ஜிப்மர் இயக்குநருக்கு வழங்கப்படுகிறது.

ஜிப்மர் மருத்துவக் குழுவின் பரிசோதனைக்கு தயாநிதி முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும், மருத்துவப் பரிசோதனைக்குப் பின், அதன் அறிக்கையை சீலிடப்பட்ட கவரில் நீதிமன்றத்துக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

மாலை தந்தி

ஞாயிற்றுக்கிழமை 30.08.2026

# மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 20 நாட்களாக முடங்கிய பத்திரப்பதிவு: பொதுமக்கள் பெரும் அவதி!




மானாமதுரை, ஆக.30-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில், கடந்த 20 நாட்களுக்கும் மேலாக பத்திரப்பதிவு பணிகள் முற்றிலுமாக முடங்கியுள்ளதால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மானாமதுரை பேரூராட்சி/நகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நிலங்களை வாங்கவும் விற்கவும் முடியாமல் பத்திரப்பதிவு பணிகள் தடைபட்டுள்ளன. இதுகுறித்து அலுவலகத்தில் கேட்டபோது, "இணையதளம் (Server / Portal) கடந்த 20 நாட்களாக வேலை செய்யவில்லை" என்று காரணங்கள் தெரிவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனால், அவசரத் தேவைகளுக்காகவும் பிற பயன்பாடுகளுக்காகவும் நிலம் வாங்க மற்றும் விற்க வந்த பொதுமக்கள் கடந்த பல நாட்களாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அலைக்கழிக்கப்பட்டு வருகின்றனர். இணையதள கோளாறு மட்டுமே இதற்குக் காரணமா அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் காரணங்கள் உள்ளனவா என்பதை அரசு அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இந்த விவகாரத்தில் தமிழக அரசும் மாவட்ட நிர்வாகமும் உடனடியாகத் தலையிட்டு, தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்து தடையின்றி பத்திரப்பதிவு நடைபெற விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சோனா ராஜு மற்றும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மேலப்பசளை அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்





மானாமதுரை, ஆக-30

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட மேலப்பசளை அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெற்றது.

குழுத் தலைவர் செல்வி செந்தூர்பாண்டியன் தலைமை தாங்கினார். தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பெற்றோர்கள் திரளாக பங்கேற்றனர். பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், வரவுசெலவு விவரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் பள்ளிக்கு தேவையான நலத்திட்டங்கள், மாணவர்களின் கல்வி முன்னேற்றம் மற்றும் அவர்களின் செயல்பாடுகள் குறித்து ஆசிரியர்கள் பெற்றோர்களிடம் எடுத்துரைத்தனர்.

வரும் அக்டோபர் 10-ஆம் தேதி நடைபெறவுள்ள கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் மற்றும் தலைவரை தேர்வு செய்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இதில் பெற்றோர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு விழிப்புணர்வு கூட்டம்



காளையார்கோவில், ஆக30-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு குறித்த பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய கூட்டத்தில் தலைமையாசிரியர் சுரேஷ் வரவேற்றுப் பேசினார். பள்ளி மேலாண்மைக் குழுவின் அவசியம், செயல்பாடுகள் மற்றும் செப்டம்பர் 26-ஆம் தேதி நடைபெறவுள்ள புதிய தலைவருக்கான தேர்தல் நடைமுறைகள் குறித்து அவர் விளக்கினார்.

புதிய குழுவில் மொத்தம் 24 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும், இதில் 50 சதவீதம் பெண் உறுப்பினர்கள் இடம்பெறுவது கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மாணவர்களின் கற்றல் தரத்தை உயர்த்துதல், இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்தல் உள்ளிட்ட பணிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு முக்கியமானது என எடுத்துரைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு பள்ளி மேலாண்மைக் குழு சிறப்பாக செயல்பட்டு, குழந்தைகள் தின விழா உள்ளிட்ட நிகழ்வுகளிலும் பள்ளி வளர்ச்சிப் பணிகளிலும் பங்களித்தது நினைவுகூரப்பட்டது. இதன் அடிப்படையில் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, 'சிறந்த பள்ளி மேலாண்மைக் குழு' விருதைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் தலைவர் டேவிட் அருள்சாலினி, துணைத் தலைவர் ஜெயா மற்றும் குழு உறுப்பினர்களுக்கு பள்ளி நிர்வாகம் நன்றி தெரிவித்தது.

கூட்டத்தில் ஆசிரியர்கள் முத்துக்குமார், காளீஸ்வரன், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் முத்துக்குமார் நன்றியுரை வழங்க, தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

## சிறப்பாக நடைபெற்ற குளோபல் அச்சீவர்ஸ் கவுன்சில் விருது வழங்கும் விழா

# சமூக சேவைக்காக டாக்டர் சரவண மூர்த்தி கிருஷ்ணனுக்கு கௌரவ முனைவர் பட்டம்! – டாக்டர் அருண் சின்னத்துரைக்கு தேசிய சமூக சாதனையாளர் விருது







புதுடெல்லி, ஆக.30-

புதுடெல்லி (ஆகஸ்ட் :23 )அன்று ஹோட்டல் சாம்ராட் அரங்கில் குளோபல் அச்சீவர்ஸ் கவுன்சில் சார்பில் நடைபெற்ற சிறப்பு விருது வழங்கும் விழா வெகுசிறப்பாக நடைபபற்றது. விழாவிற்கு குளோபல் அச்சீவர்ஸ் கவுன்சில் தலைவர் , ஆர். செல்வம் தலைமை வகித்தார்.

விழாவில் சிறப்பு தலைமை விருந்தினராக இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர். திரு. டொகன் சாஹு கலந்து கொண்டு சிறப்பித்தார். Advo-cate-on-Record-ஆகவும், டெல்லி தமிழ் சங்க தலைவருமான டாக்டர் ஜி. சிவ பாலமுருகன் கலந்து கொண்டார். மேலும் திரிபுரா ஏசியன் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் வைஷஜி டி ஹல்க்பி அகில பாரத இந்து மகா சபா தேசிய தலைவர்., முன்னாகுமார்சர்மா, இந்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சக ஆலோசனைக் குழு உறுப்பினர்., செல்வி வைஷாலி தோமர், பாஜக தேசிய இணை ஒருங்கிணைப்பாளர், நேதா சீனிவாஸ், பதிப்பாளர் மற்றும் தலைமை ஆசிரியர், சஞ்சய் குமார் படாலா ஸ்ரீ ஜெயம் அறக்கட்டளை சாரிட்டபிள் டிரஸ்ட் தலைவர் டாக்டர் ஜெ முருகப்பெருமான், இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மாநில அளவிலான திஷா குழு உறுப்பினர் டாக்டர், கே.ஜி. தண்டபாணி, உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.சமூக சேவைக்காக டாக்டர் சரவண கிருஷ்ணமூர்த்திக்கு கௌரவ முனைவர் பட்டம் மக்கள் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு, சமூகத்தின் தேவையுள்ள மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வரும் டாக்டர் சரவணன் மூர்த்தி கிருஷ்ணன் ( 55) அவர்களின் சமூகப் பணிகளை பாராட்டி, சவுத் வெஸ்டர்ன் அமெரிக்கன் பல்கலைக்கழகம் சார்பில் கௌரவம் முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவி உபகரணங்கள், முதியவர்களுக்கு உணவு மற்றும் உடைகள், ஊன்றுகோல்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள், குளிர்காலங்களில் போர்வைகள் போன்றவற்றை வணங்கி டாக்டர் சரவணன் மூர்த்தி கிருஷ்ணன் தொடர்ந்து மனிதநேய பணிகளில் ஈடுபட்டு வருகிறார். ஹோட்டல் சாம்ராட் அருகில் நடைபெற்ற விழாவில் கௌரவம் முனைவர் பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

டாக்டர் அருண் சின்னத்துறைக்கு தேசிய சமூக சாதனையாளர் விருது இதே விழாவில் பல்வேறு துறைகளில் சமூக சேவையாற்றி வரும் சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத் தலைவர் டாக்டர் அருண் சின்னத்துரை சேவையை பாராட்டி நேஷனல் சோசியல் அச்சீவ்மென்ட் அவார்ட் வாங்கப்பட்டது.

சமூக நலன், மாற்றுத்திறனாளிகளின் நலன், முதியோர் நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொடர்ந்து சேவையாற்றி வரும் சாதனையாளர்களை கௌரவிக்கும் வகையில் விழா நடைபெற்றது.

விழாவில் தொடக்க நிகழ்வு வரவேற்புரை மற்றும் விருது வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றன. பல்வேறு துறைகளை சேர்ந்த சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், வழக்கறிஞர்கள், சாதனையாளர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு விருது பெற்றவர்களை பாராட்டினார் விழா சிறப்பாக நிறைவடைந்தது.

# நீலகிரி மாவட்டத்தில் படுகர் சமுதாயத்திற்கு பெருமை சேர்த்த நீலகிரி அரசுப் பள்ளி மாணவர் அரவிந்த் தொண்டன்



நீலகிரி, ஆக்.30-

நீலகிரி மாவட்டம் தூனேரி அரசுப் பள்ளியில் பயின்ற படுகர் சமுதாயத்தைச் சேர்ந்த அரவிந்த் தொண்டன், இந்தியப் பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பின் (CII) வர்த்தகக் குழுவினருடன் ஜப்பான் நாட்டிற்குப் பயணம் மேற்கொள்கிறார். மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையில் நடைபெறும் அரசு முறைப் பயணத்தில் அவர் பங்கேற்கிறார் என்பது ஒட்டுமொத்த படுகர் சமுதாயத்திற்கும் மிகுந்த பெருமை சேர்க்கும் விஷயமாக அமைந்துள்ளது.

இந்த உயர்மட்டக் குழுவினர் டோக்கியோ மற்றும் ஒசாகா ஆகிய நகரங்களுக்குச் சென்று, இந்தியா-ஜப்பான் இடையேயான பொருளாதார மற்றும் தொழில் உறவுகளை வலுப்படுத்துவதுகூட்டங்கள் மற்றும் உயர்மட்ட ஆலோசனைகளில் பங்கேற்க உள்ளனர். பெங்களூரைச் சேர்ந்த 'சிங்குலாரிஸ் வெல்த்' (Singularis Wealth) நிறுவனத்தின் பிரதிநிதியாகப் பங்கேற்கும் அரவிந்த் தொண்டன், புதிய வணிக வாய்ப்புகளை ஆராய்வதற்கும் சர்வதேச வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துள்ளார். இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தனது படுகர் சமுதாய மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

# வழிபாட்டு உரிமை மறுப்பு புகார்: 50 ஆண்டுகால பாகுபாட்டுக்கு தீர்வு கோரி கிராம மக்கள் கோரிக்கை





கமுதி, ஆக.30-

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் நகரத்தார்குறிச்சி கிராமத்தில் உள்ள பாலநாகம்மாள் கோயிலில் வழிபாடு செய்வதில் பட்டியலின மக்களுக்கு தொடர்ந்து கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்த கிராமத்தில் 150-க்கும் மேற்பட்ட தேவேந்திர குல வேளாளர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அம்மன் கோயிலுக்கு வழிபாடு செய்யச் செல்லும்போதும், கோயில் தெருக்களைக் கடக்கும்போதும் செருப்பு அணியக்கூடாது, விளக்குகள் பிடித்து வரக்கூடாது, ரேடியோ மற்றும் அலங்கார விளக்குகள் அமைக்கக்கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

மேலும், நேர்த்திக்கடனாக ஆடு மற்றும் கோழி பலியிடுவதற்கும் அனுமதி மறுக்கப்படுவதாக கூறப்படுகிறது. விவசாய நிலங்களுக்கும் அன்றாட பணிகளுக்கும் கோயில் வழித்தடத்தை கடந்து செல்ல வேண்டிய சூழலில், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தகைய பாகுபாடு நீடிப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கடந்த ஆண்டு கோயில் கும்பாபிஷேகத்தின்போது காவல்துறையினர் தலையிட்டு சுமூக தீர்வு ஏற்படுத்தினர். ஆனால் தற்போது மீண்டும் கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்ப ட்டுள்ளதாகவும், கோயில் தெருவில் அமைக்க ப்பட்டிருந்த மின்விளக்குகள் அகற்றப்ப ட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் புகார் அளித்தும் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை என கிராம மக்கள் கூறினர். அனைவருக்கும் பொதுவான வழிபாட்டுத் தலத்தில் சம உரிமையுடன், சுதந்திரமாக வழிபட மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நகரத்தாகுறிச்சி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர் பயணத்தின் போது உதகை வட்டம் சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு





நீலகிரி, ஆக.30-


நீலகிரி மாவட்டம் உதகை வட்டம், சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, செய்தியாளர் பயணத்தின் போது, மாவட்ட ஆட்சி த்தலை வர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு செய்தியா ளர்களிடம் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமை ச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, இன்றைய தினம் (27.08.2026) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் , உதகை வட்டம் சோலூர் பேரூராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவே டுகள், மருந்துகளின் இருப்பு மற்றும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும், அதே பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், சோலூர் கால்நடை மருந்தகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், மருந்து களின் இருப்பு, கால்நடைகளின் வருகை குறித்தும், சோலூர் அரசு மேல்நிலை ப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, பள்ளியின் சமையலறை, இருப்பு அறை மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவு, சோலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள், வங்கியின் செயல்பாடுகள், பயிர்கடன் குறித்தும், மேலும், சோலூர் கிளை நூலகத்தில் பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் வாசகர்களின் எண்ணிக்கை குறித்தும், நியாய விலைக்கடையில் உணவு பொருட்களின் இருப்பு, தரம், பராமரி க்கப்படும் பதிவேடுகள் குறித்தும் மற்றும் சோலூர் பேரூராட்சி அலுவலகத்தில், பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பொதுமக்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட கோட்டட்டி மற்றும் சேலக்கல் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகள், குழந்தைகளின் வருகை, குழந்தைகளின் எடை, உயரம் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், ரூ.24.60 இலட்சம் மதிப்பில் கோக்கால் பகுதியில் கட்டப்பட்டு வரும் பழங்குடியினருக்கான மண்பாண்ட பட்டறையி னையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

## சுதந்திர போராட்ட தியாகிகளை அவமதிக்கும் தொப்பி வாலா பிரியாணி கடையை கண்டித்து CPI. ML. மாஸ் லைன் மாவட்ட செயலாளர் கண்டன அறிக்கை







தேனி, ஆக.30-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) தேனி மாவட்ட குழு சார்பில், மாவட்ட செயலாளர் ஜோதி பாண்டிகண்ணன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில், தொப்பி வாலா பிரியாணி கடை தனது சுய இலாபத்திற்காகவும், சுய விளம்பரத்திற்காகவும் தேசத்தின் மீது அளப்பரிய பற்று கொண்டு, விடுதலைப் போராட்டத்திற்காக தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்த கப்பலோட்டிய தமிழன். வ.உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார் போன்ற தேசத் தலைவர்களின் புகைப்படங்களை தனது வணிக விளம்பரத்திற்காக பயன்படுத்தியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். தேசத் தலைவர்கள் என்பது ஒரு தனியார் நிறுவனத்தின் வணிக விளம்பரத்திற்கான பொருட்கள் அல்ல. அவர்களின் தியாகமும், போராட்டமும், வரலாற்றுப் பங்களிப்பும் ஒட்டுமொத்த தமிழினத்திற்கும், இந்திய ஒன்றியத்தின் பொதுமக்களுக்கும் சொந்தமான பெருமையாகும். அவர்களின் புகைப்படங்களை வணிக நோக்கத்திற்காக பயன்படுத்துவது தேசத் தலைவர்களின் வரலாற்று மரியாதையை கொச்சைப்படுத்தும் செயலாகும். உங்கள் கடை விளம்பரத்திற்காக பயன்படுத்துவதற்கு எத்தனையோ நடிகர், நடிகைகள் மற்றும் பிரபலங்கள் இருக்கிறார்கள். அவர்களின் புகைப்படங்களை பயன்படுத்தலாம். இல்லையெனில் உங்களது குடும்ப உறுப்பினர்களின் புகைப்படங்களையே பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் தேசத்திற்காக போராடிய தலைவர்களின் புகைப்படங்களை உங்கள் வணிக விளம்பரத்திற்காக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும். எனவே, தொப்பி வாலா பிரியாணி கடை நிர்வாகம் உடனடியாக அந்த பதாகையை அகற்றி, தேசத் தலைவர்களின் புகைப்படங்களை வணிக விளம்பரத்திற்காக பயன்படுத்தியதற்காக பொதுமக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையெனில், இந்த விவகாரத்தில் சட்டப்படியான மற்றும் ஜனநாயக ரீதியான அனைத்து எதிர்ப்புகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பிரகிருதி 2026: காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள மாணவியருக்கு விழிப்புணர்வும் செயல்பாட்டுக்கான அழைப்பும் – எஸ்.டி.என்.பி. மகளிர் வைணவக் கல்லூரி







குரோம்பேட்டை, ஆக.30-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் "காலநிலை மீள்தன்மை என்பது கூட்டுப் பொறுப்புடன் தொடங்குகிறது" என்ற கருத்தை மையமாகக் கொண்டு, குரோம்பேட்டையில் உள்ள ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி (தன்னாட்சி) சார்பில் "பிரகிருதி 2026 இயற்கையோடு இணைந்து வாழ்தல்" என்ற தலைப்பில் காலநிலை மாற்ற உச்சிமாநாடு நடைபெற்றது.

காலநிலை மாற்றத்தின் தற்போதைய சவால்கள் மற்றும் அதன் எதிர்காலத் தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை மாணவியரிடையே ஏற்படுத்துவதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அவர்களின் பங்களிப்பையும் பொறுப்புணர்வையும் வலியுறுத்தும் நோக்கில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இளம் தலைமுறையின் பங்களிப்பு, அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்ளக்கூடிய சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மீள்தன்மை கொண்ட சமூகங்களை உருவாக்குவதன் அவசியம் ஆகியவை நிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டன.

காலநிலை மாற்றத்தின் வளர்ந்து வரும் சவால்கள் குறித்து சிந்திக்கவும், அவற்றை எதிர்கொள்வதற்கான தீர்வுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து அறிந்துகொள்ளவும் வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவியரை ஒரே தளத்தில் இம்மாநாடு ஒன்றிணைத்தது.

இந்நிகழ்வில், சென்னை விஐடி (VIT) காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் பேராசிரியரும் இயக்குநருமான டாக்டர் கே.பழனிவேலு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, "மாறிவரும் காலநிலையில் நல்வினக்கத்தை மீட்டெடுத்தல் நெருக்கடியிலிருந்து மீள்தன்மைக்கு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைப் புரிந்துகொள்வதுடன், அதனை எதிர்கொள்ளும் சமூக மற்றும் தனிநபர் அளவிலான நடவடிக்கைகளின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற குழு விவாதத்தில், சென்னை GIZ நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் திரு. கே.எஸ். சுதாகர் நடுவராகப் பங்கேற்றார். தமிழ்நாடு காலநிலை மாற்றக் குழுவின் (TNGCC) காலநிலை மாற்ற நிபுணர் டாக்டர் ஆர். பிரசன்ன வெங்கடேஷ், தமிழ்நாடு சுகாதாரப் பாதுகாப்புக்கான உச்ச திறன் மேம்பாட்டு மையத்தின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சித் தலைவர் டாக்டர் சுகன்சின்னா மாறன், சென்னை பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுற்றுச்சூழல் ஆர்வலர் லோகேஷ் பி. ஆகியோர் கலந்துகொண்டு தங்களது கருத்துகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

காலநிலை மாற்றம் என்பது சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல; அது மனித உடல்நலம், உணவுப் பாதுகாப்பு, நீர்வளம், பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வியல் ஆகியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை குழு விவாதங்கள் எடுத்துரைத்தன. குறிப்பாக, இளம் தலைமுறையினர் காலநிலை மாற்றத்தின் விளைவுகளைப் புரிந்துகொண்டு, தங்கள் அன்றாட வாழ்க்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

"காலநிலை விழிப்புணர்விலிருந்து காலநிலை நடவடிக்கைக்கு" மாற வேண்டியதன் அவசியத்தையும் நிகழ்வு வலியுறுத்தியது. சுற்றுச்சூழல் பாதுகாப்பும் மனித முன்னேற்றமும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல; இரண்டும் இணைந்து முன்னேற வேண்டியவை என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

மாணவியரிடையே இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, நீர் மற்றும் ஆற்றலைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது, கழிவுகளைக் குறைப்பது, மரம் வளர்ப்பது, பசுமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது போன்ற அன்றாடச் செயல்பாடுகள் மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் தங்களாலும் பங்களிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் நிகழ்வின் கருத்துகள் அமைந்திருந்தன.

காலநிலை மீள்தன்மை கொண்ட சமூகங்களை உருவாக்குவதில் கல்வி நிறுவனங்களுக்கும் இளம் தலைமுறைக்கும் உள்ள முக்கியப் பங்கை இம்மாநாடு எடுத்துக்காட்டியது. குறிப்பாக, விழிப்புணர்வைப் பெறுவது மட்டுமன்றி, அந்த விழிப்புணர்வைச் செயல்பாடாக மாற்றுவதே இன்றைய காலநிலைச் சூழலின் அவசியம் என்ற செய்தி மாணவியரிடம் கொண்டு செல்லப்பட்டது.

இயற்கையுடனான மனிதகுலத்தின் உறவை மறுபரிசீலனை செய்யவும், கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள், சமூகங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் காலநிலை உணர்வை அர்த்தமுள்ள செயல்பாடுகளாக மாற்றவும் அழைப்பு விடுத்தவாறு "பிரகிருதி 2026" உச்சிமாநாடு நிறைவடைந்தது.

"இயற்கையோடு இணைந்து வாழ்தல்" என்பது வெறும் முழக்கம் அல்ல; அது நமது கூட்டு வாழ்வாதாரத்தையும் எதிர்காலத் தலைமுறைகளையும் பாதுகாப்பதற்கான அவசியமான செயல்திட்டமாகும் என்ற வலியுறுத்தலுடன் இம்மாநாடு நிறைவுற்றது.

இம்மாநாட்டு நிகழ்வில் கல்லூரி முதல்வர் துணை லெப்டினன்ட் முனைவர் கே.காந்திமதி, கல்லூரி சுயநிதிப்பிரிவின் இயக்குநர் முனைவர் எம். எஸ். விஜயா, பல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவியர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திருப்புவனம் அருகே வழிப்பறியில் ஈடுபட்ட 6 பேர் குண்டர் சட்டத்தில் கைது




சிவகங்கை, ஆக.30-

திருப்புவனம் அருகே வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட 6 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். திருப்பாச்சேத்தி பகுதியைச் சேர்ந்த சாமிதுரை என்பவர் தனது மைத்துனருடன் இருசக்கர வாகனம் வாங்குவதற்காக லாடனேந்தல் கால்வாய் வழியாக சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த 6 பேர் கொண்ட கும்பல், அவர்களது வாகனத்தை வழிமறித்து ரூ.25,500 ரொக்கப்பணம் மற்றும் 2 செல்போன்களை பறித்துச் சென்றது. மேலும், சாமிதுரை, பசும்பொன் மற்றும் சுப்பையா ஆகியோரை வாள் மற்றும் ஆயுதங்களால் தாக்கி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளனர். இதுகுறித்து சாமிதுரை அளித்த புகாரின் பேரில், திருப்புவனம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து, வழிப்பறியில் ஈடுபட்ட 6 எதிரிகளையும் கைது செய்து நீதிமன்றக் காவலில் சிறையில் அடைத்தனர். இந்நிலையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் உத்தரவின்படி 6 எதிரிகளும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வழக்கில் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளை கைது செய்த திருப்புவனம் காவல் ஆய்வாளர் சேதுமணி மாதவன் மற்றும் காவலர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்.






## சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் இணையவழி குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருப்பத்தூர், ஆக.30-

திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., வழிகாட்டுதலின்பேரில், வாணியம்பாடி, ஆலங்காயம், முல்லை கிராமம், வெள்ளக்குட்டை வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை காவல்துறையினர் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளிடையே பெண்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர்.



## சப்பாணிபட்டியில் எடப்பாடி பழனிசாமிக்கு அதிமுகவினர் உற்சாக வரவேற்பு

கிருஷ்ணகிரி, ஆக.30-

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு இன்று வருகை புரிந்த தமிழக முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி கே. பழனிசாமிக்கு, மாவட்ட எல்லையான காவேரிப்பட்டினம் அருகே சப்பாணிபட்டியில் அதிமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையான சப்பாணிபட்டிக்கு எடப்பாடி கே. பழனிசாமி வந்தபோது, அதிமுக துணைப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி தலைமையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரண்டு அவருக்கு வரவேற்பு அளித்தனர். அப்போது கே.பி. முனுசாமி, எடப்பாடி கே. பழனிசாமிக்கு சால்வை அணிவித்து, மலர் கொத்து வழங்கி வரவேற்றார்.

இதையடுத்து அங்கு திரண்டிருந்த அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்பு தெரிவித்தனர். கட்சி நிர்வாகிகள் பலரும் எடப்பாடி கே. பழனிசாமியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர், முன்னாள் எம்எல்ஏ அசோக்குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முனி வெங்கட்டப்பன், ராஜேந்திரன், தமிழ்செல்வம், மனோரஞ்சிதம் நாகராஜ், கோவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் சதீஷ்குமார், நகர செயலாளர்கள் கேசவன், விமல், ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணன், பையூர் ரவி, கண்ணியப்பன், சைலேஷ் கிருஷ்ணன், ரவிச்சந்திரன், மாணவரணி மாவட்ட செயலாளர் ராகுல், சிறுபான்மையினர் நலப்பிரிவு மாவட்ட செயலாளர் மக்பூல், மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட அம்மா பேரவை தங்கமுத்து உள்ளிட்ட ஏராளமான அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

எடப்பாடி கே. பழனிசாமியின் கிருஷ்ணகிரி மாவட்ட வருகையையொட்டி சப்பாணிபட்டி பகுதியில் அதிமுகவினர் திரண்டதால் அப்பகுதியில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் உற்சாகம் காணப்பட்டது.

## திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் உடற்கல்வித்துறை சார்பாக விளையாட்டு விழா







திருப்பத்தூர், ஆக.30-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் உடற்கல்வித்துறை சார்பாக விளையாட்டு விழா நடைபெற்றது. கல்லூரித் தலைவர்விமல் சந்த் ஜெயின், இணைத் தலைவர் லிக்மி சந்த் ஜெயின், கல்லூரித் தலைவர்.

திலீப் குமார் ஜெயின், செயலாளர் ஆனந்த் சிங்வி, இணைத்தலைவர்கள்

ஸ்ரீபால் குமார் ஜெயின், ஆனந்த் குமார் ஜெயின், பொருளாளர் லலித் குமார் ஜெயின், இணை செயலாளர் நவின் குமார் ஜெயின், முதல்வர் முனைவர் ம.இன்பவள்ளி ஆகியோர் தலைமை வகித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாக்கரே மற்றும் சர்வதேச முன்னால் இந்திய கிரிகெட் வீராங்கனை திருஷ் காமினி கலந்து கொண்டு புறாக்களையும் வண்ண பலூன்களையும்பறக்கவிட்டு விளையாட்டு விழாவைத் தொடங்கி வைத்தனர்.

மாணவிகளின் அணி வகுப்பு, இருசக்கர வாகன சாகசங்கள் நடைபெற்றது. தொடர்ந்து ஒலிம்பிக்தீபம் ஏற்றப்பட்டு, விளையாட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது. காவல் கண்காணிப்பாளர் உரையாற்றுகையில் போதைப் பொருள் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். விளையாட்டு போதை பொருளை முற்றிலும் எதிர்க்கிறது. இதன் மூலம் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். உடல் நலம் மற்றும் மனநலத்தையும் பாதுகாத்து ஆரோக்கியமாக வாழலாம் என்றும், கிரிக்கெட் வீராங்கணை திருஷ் காமினி உரையாற்றுகையில் பயிற்சி நம்மை மேம்படுத்தும், ஒரு இலக்கை தேர்ந்தெடுத்து அதை அடைவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டால் நிச்சயம் வெற்றி பெற முடியும் என்றும் விளையாட்டின் முக்கியத்துவம் குறித்து சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றினர். சிறப்பு விருந்தினர் விளையாட்டு ஆண்டு மலரை வெளியிட்டனர். கல்லூரி முதல்வர் விளையாட்டு ஆண்டறிக்கை வாசித்தார்.

பச்சை, நீளம், மஞ்சள், சிவப்பு உள்ளிட்ட அணிகளின் நடனம், பல்வேறு யோகாசன உருவாக்கம், தேசிய மாணவர் படை மாணவிகளின் பிரமிடு உருவாக்கம்,100,200,400 மிட்டர் ஓட்டப்பந்தயமும் நடைபெற்றன.பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும், பல்கலைக்கழக அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவிகளுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள்வழங்கப்பட்டன. விழாவில் சிறப்பாக செயல்பட்ட பச்சை வண்ண அணிக்கு ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பை வழங்கப்பட்டது. கல்லூரிப் பேராசிரியர்கள், வேலூர் ஜெயின்பள்ளி ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## வேளாங்கண்ணி மாதா பேராலய ஆண்டு பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது: அலைமோதும் பக்தர்கள் கூட்டம்

நாகை, ஆக.30-

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய அன்னை பேராலயம் உள்ளது. கீழ்திசை நாடுகளின் லூர்து நகரம் என அழைக்கப்படுகிறது. இந்த பேராலயத்துக்கு தினம்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்த பேராலய ஆண்டு பெருவிழா ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி செப்டம்பர் 8ம் தேதி அன்னையின் பிறப்பு விழாவுடன் நிறைவு பெறும். விழா நாட்களில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் வருகை தருவர்.

அதன்படி வேளாங்கண்ணி பேராலய ஆண்டு பெருவிழா இன்று (29ம் தேதி) மாலை 5.45 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதைதொடர்ந்து நாளை (30ம் தேதி) முதல் 7ம் தேதி வரை ஒவ்வொரு நாளும் காலை, மதியம் ஆகிய நேரங்களில் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கிலம், கொங்கனி ஆகிய மொழிகளில் விண்மீன் ஆலயம், பேராலயம் மேல்கோயில், பேராலயம் கீழ்கோயில் ஆகிய இடங்களில் சிறப்பு வழிபாடு நடக்கிறது.

செப்டம்பர் 7ம் தேதி பெரிய தேர்பவனி நடக்கிறது. மறுநாள் 8ம் தேதி அன்னையின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. அன்று மாலை கொடியிறக்கப்படுகிறது. இன்று கொடியேற்றம் நடப்பதால் கடந்த 3 தினங்களாகவே பக்தர்கள் பாதயாத்திரையாக வேளாங்கண்ணிக்கு வந்த வண்ணம் உள்ளனர். பேராலய வளாகம், கடைவீதி, கடற்கரை ஆகிய இடங்களில் இன்று லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.எஸ்.பிரவீன் கௌதம், முன்னிலையில்ந டைபெற்றது.

# பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் நடத்தும் 116 ஆம் ஆண்டு அன்னை தெரேசா அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாரத்தான் போட்டி

பம்மல், ஆக்.30-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் நடத்தும் 116 ஆம் ஆண்டு அன்னை தெரேசா அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 23/08/2026 அன்று மாரத்தான் போட்டி 2026கான இந்நிகழ்ச்சி அறக்கட்டளை இயக்குனர் தலைமை செல்வி. பி.கவிதா அவர்கள் முன்னிலை தலைவர் பி.கலா, எஸ்.அருணகிரி, கௌரவ தலைவர் எஸ். தேவி செயலாளர் பம்மல் சங்கர் நகரில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் ஜே.காமாட்சி ஜெயகிருஷ்ணன் தவெக, பம்மல் டி.கந்தசாமி தவெக மாநில செய்தி தொடர்பாளர் சீனிவாசன் சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலகம், வி.ஜெகநாதன் பம்மல்சங்கர் நகர் 5வது வார்டு கவுன்சிலர், மலைச்சாமி சங்கர் நகர் மன்ற தலைவர், ஜான்சி உமா பெருநகர் சென்னை மாநகராட்சி மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர், அப்பாவு - தொகுப்பாளர், டாக்டர் கண்ணன் - லயன்ஸ் கிளப் செயலாளர், , ரூட்



லேம் டிரஸ்ட் அன்னை லதா, டேன்யா மார்டின்- Tranguil minds, ஜெயப்பிரியா வானம் & நீர் டிரஸ்ட், பம்மல். வினோத் - சமூக ஆர்வலர், இந்துமதி சமூக ஆர்வலர் இ.எழில் விமலா ஆர்வாளர் என்.சத்யராஜ் சமூக ஆர்வலர், கே.மூர்த்தி சமூக ஆர்வலர், ஜெயலட்சுமி சுரேஷ் -சமூக ஆர்வலர், மீனா சமூக ஆர்வலர், எஸ்.தேஷ் சஞ்சய் Boxer, எஸ்.தேஷ் ராகுல் Boxer, மற்றும் அறக்கட்டளை கிளைச்செயலாளர் : குன்றத்தூர் பிரகாஷ், குரோம்பேட்டை திருநாவுக்கரசு, கீரப்பாக்கம் சதீஷ் பாபு, மதுராந்தகம் மாதவன், புஷ்பா, வடசென்னை சுமித்ரா, செயற்குழு உறுப்பினர்கள், தேவி தணிகாசலம், சி.மோகன் மற்றும் மாற்றுத்திறனாளி உறுப்பினர்கள் பெற்றோர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு கோப்பையும், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. வருகை புரிந்த அனைவருக்கும் காலை உணவு, தண்ணீர், தேனீர், ஸ்னாக்ஸ் வழங்கப்பட்டது.

# ஓசூரில் 4 வழித்தடங்களில் நகரப் பேருந்து சேவை நீட்டிப்பு மற்றும் மாற்றம்: 7 கிராமங்களைச் சேர்ந்த 5,009 பேர் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து சேவைகள் தொடக்கம்

கிருஷ்ணகிரி, ஆக.30-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 4 வழித்தடங்களில் நகரப் பேருந்துகளின் வழித்தட நீட்டிப்பு மற்றும் மாற்றியமைக்கப்பட்ட பேருந்து சேவைகள் தொடங்கப்பட்டன.

ஓசூர் பேருந்து நிலையத்தில் இன்று (29.08.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் செல்வி ச. கீர்த்தனா ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. C. தினேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், புதிய பேருந்து சேவைகளை கொடியசைத்து தொடங்கி



வைத்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களின் பேருந்து வசதி தேவையை கருத்தில் கொண்டு, 4 வழித்தடங்களில் பேருந்துகளின் வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டும், மாற்றியமைக்கப்பட்டும் இயக்கப்படுகின்றன. இதன் மூலம் 7 கிராமங்களைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 5,009 பேர் பயன்பெற உள்ளனர்.

மாற்றியமைக்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள்:

1. கிருஷ்ணகிரி சின்னதம்மாண்டரப்பள்ளி:

கிருஷ்ணகிரியிலிருந்து வேப்பனப்பள்ளி வரை இயக்கப்படும் பேருந்து, இனி சின்னதம்மாண்டரப்பள்ளி வரை வழித்தடம் நீட்டிக்கப்பட்டு இயக்கப்படும்.

2. தேன்கனிக்கோட்டை கரகூர்:

தேன்கனிக்கோட்டையிலிருந்து சொரகுறுக்கி செல்லும் பேருந்து, கரகூர் வழியாக உள்சென்று வரும் வகையில் மாற்றியமைக்கப்பட்டு இயக்கப்படும்.

3. பெரியகுத்தி B.சிங்கிரிப்பள்ளி:

பெரியகுத்தியிலிருந்து சூளகிரி செல்லும் பேருந்து, B.சிங்கிரிப்பள்ளி வழியாக உள்சென்று வரும் வகையில் இயக்கப்படும்.

4. ஓசூர் நாகசந்திரம்:

ஓசூரிலிருந்து பெட்டப்பள்ளி வரை செல்லும் பேருந்து, இனி நாகசந்திரம் வரை வழித்தடம் நீட்டிக்கப்பட்டு இயக்கப்படும்.

இந்த புதிய வழித்தட நீட்டிப்பு மற்றும் மாற்றங்களால், இதுவரை பேருந்து வசதி குறைவாக இருந்த பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தங்களது பள்ளி, கல்லூரி மற்றும் அன்றாட பணிகளுக்காக எளிதாகப் பயணம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மரியாதைக்குரிய நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் திரு. க. ராஜராஜன், துணை மேலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# திருச்சி மெமு ரயில் பராமரிப்பு மையம் பயன்பாட்டுக்கு வருவதில் மேலும் தாமதம்

திருச்சி, ஆக.30-

திருச்சி அருகே மஞ்சத்திடல் ரயில் நிலையம் அருகே கட்டப்பட்டு வரும் மெமு ரயில் பெட்டிகள் பராமரிப்பு மையம் பயன்பாட்டுக்கு வருவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

திருச்சியை அடுத்த காட்டூர் அருகே மஞ்சத்திடல் ரயில் நிலையம் அருகே பொன்மலை ரயில்வே குடியிருப்பை ஒட்டி அமைந்துள்ள ரயில்வே துறைக்கு சொந்தமான 85,000 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் ரூ.61 கோடி மதிப்பில் மெமு ரயில் பெட்டிகள் பராமரிப்பு மையம் கட்டப்பட்டு வருகிறது. 2024-ம் ஆண்டு தொடங்கிய இதன் கட்டுமானப் பணி 2026 மார்ச் மாதம் முடிவடைந்து பயன்பாட்டுக்கு வந்துவிடும் என ரயில்வே நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், குறிப்பிட்ட கால க்கெடு முடிந்து கூடுதலாக 5 மாதங்கள் ஆகியும் இன்னமும் பணிகள் முழுமையாக முடிவடையவில்லை.

மெமு பராமரிப்பு மையம், நிர்வாக அலுவலகம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. தலா 12 பெட்டிகள் கொண்ட 2 மெமு ரயில்களை ஒரேநேரத்தில் முழுமையாக ஆய்வு செய்து பராமரிக்கும் வசதியும், 2 ரயில்களை ஒரே நேரத்தில் தூய்மைப்படுத்தும் வசதியும் இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பராமரிப்பு மையத்துக்கு ரயில்கள் வந்து செல்லும் இணைப்பு ரயில் பாதைகள் அமைத்தல், பொன்மலை ரயில்வே குடியிருப்பு-கீழ கல்கண்டார்கோட்டை பகுதிகளை இணைக்கும் சாலையை மூடிவிட்டு மாற்றுப்பாதையாக சுரங்கப்பாதை அமைத்தல் ஆகிய பணிகள் முடிவடையாமல் உள்ளன. பொது மக்கள் போக்கு வரத்து வசதிக்காக புதிதாக அமைக்கப்படும் சுரங்கப்பாதைக்கு செல்லும் பாதையில் மின்மாற்றி மற்றும் உயர் அழுத்த மின்சார கேபிள்கள் செல்கின்றன. இவற்றை மாற்றி அமைத்து தரக் கோரி ரயில்வே நிர்வாகம் மின் வாரியத்துக்கு கடிதம் எழுதியுள்ளது.

ஆனால், மின்வாரிய அலுவலர்கள் பல்வேறு காரணங்களால் இப்பணிகளை செய்து தருவதில் தாமதம் செய்து வருகின்றனர். இதனால் மெமு பராமரிப்பு மையம் பயன்பாட்டுக்கு வருவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து திருச்சி கோட்ட ரயில்வே உயரதிகாரிகள் கூறியது: மஞ்சத்திடல் மெமு ரயில் பராமரிப்பு மைய கட்டுமானப் பணிகள் 92 சதவீதம் முடிவடைந்துவிட்டன. மின் வாரியம் சார்பில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் உட்பட சில பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் அனைத்தும் நிறைவடைந்து வரும் டிசம்பர் மாதம் மெமு ரயில் பராமரிப்பு மையம் பயன்பாட்டுக்கு வந்துவிடும்' என்றனர்.



# தாம்பரத்தில் தேமுதிக சார்பில் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாள் விழா

தாம்பரம். ஆக்.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி தேமுதிக சார்பில், கட்சியின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாள் விழா மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் அறிவுருத்தலின் படி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு தாம்பரம் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானபால் தலைமை வகித்தார். பகுதி பொருளாளர் வெ.ஜார்ஜ் முன்னிலை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் மா.செழியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

தாம்பரம் கக்கன் தெருவில் வித்யா திரையரங்கம் அருகே தேமுதிக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சண்முகம் சாலையில் கேக் வெட்டி, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும், தாம்பரம் கிருஷ்ணா நகர் மனோ மருத்துவமனை அருகே 53-வது வார்டு வட்டச் செயலாளர் பாஸ்கர் தலைமையிலும், அவைத்தலைவர் தேவேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில், மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானபால் பொதுமக்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கினார்.

நிகழ்ச்சிகளில் மாவட்ட மகளிரணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, தாம்பரம் மாநகர மத்திய பகுதி செயலாளர் என்.ஆர்.ஆனந்தன் மற்றும் மேற்கு பகுதி நிர்வாகிகள் பவுன்ராஜ், பழனிவேல், ரகுபதி, சுரேஷ், ஜெய்கணேஷ், நயினா முகமது, பானுமதி, திலகா, பத்மா, செல்வி, 49-வது வார்டு வட்டச் செயலாளர் கே.வி.மணி, வட்ட அவைத்தலைவர் நிஷாந்த், நிர்வாகி கவின்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# ஓசூர் பி.எம்.சி டெக் பாலிடெக்னிக் கல்லூரியில் ரெட்கிராஸ் சார்பில் இரத்ததான முகாம்

கிருஷ்ணகிரி, ஆக.30-

"இரத்தம் அளியுங்கள், பிளாஸ்மா அளியுங்கள், உயிரைப் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, ஓசூர் பொறியாளர் பெருமாள் மணிமேகலை பாலிடெக்னிக் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி கிருஷ்ணகிரி மாவட்ட கிளை இணைந்து சிறப்பு இரத்ததான முகாமை நடத்தியது. முகாமிற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர் பெ.குமார் தலைமை வகித்தார். செயலாளர் பெ.மலர், அறங்காவலர் பெ.சசிரேகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இயக்குனர் சுதாகரன் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் பாலசுப்ரமணியம் ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர்.

இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளரும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான செந்தில்குமார் மற்றும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவர் வசந்த்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவக் குழுவினர் பங்கேற்று, மாணவர்களிடம் இருந்து 80 யூனிட் இரத்தத்தை சேகரித்தனர். சேகரிக்கப்பட்ட இரத்தம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கிக்கு அனுப்பி வைக்க ப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை இளைஞர் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் முகமது அப்பாஸ் மற்றும் யூத் ரெட் கிராஸ் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# ஆற்காடு நகர மன்ற கூட்டம்

ராணிப்பேட்டை, ஆக.30-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியின் மாதாந்திர நகர மன்ற கூட்டம் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் தேவிபென்ஸ் பாண்டியன் தலைமை தாங் கினார். ஆணையாளர் சுரேஷ் குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசியதாவது நகர மன்ற தலைவர் தேவிபென்ஸ் பாண்டியன் ஆற்காடு பஸ் நிலையத்தில் இருந்த கடைகள் இடிக்கப்பட்டு புதியதாக கடைகள் கட்டப்பட்டுள்ளன. ஏற்கனவே கடை நடத்தியவர்களுக்கு மீண்டும் கடை வழங்கப்படுவதற்கு நகர மன்ற கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து நேதாஜி சங்கம் சார்பில் நீதி மன்றத்தின் வாயிலாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ரத்து செய்ய வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த சங்கம் முறையாக பதிவு பெற்ற சங்கமா என்பன குறித்து நகராட்சி ஆணையாளர் ஏழு நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நகர்மன்ற உறுப்பினர்

பொன். ராஜசேகர்

ஏற்கனவே கடை நடத்தியவர்களுக்கு மீண்டும் கடை வழங்குவதாக நகர மன்ற தலைவர் கூறினார். இதனால் கடை நடத்தியவர்கள் நகர மன்ற தலைவரிடம் கடை சாவியை ஒப்படைத்தனர். எனவே மீண்டும் அவர்களுக்கு பஸ் நிலையத்தில் கடை வழங்க வேண்டும். புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு முன்பு தள்ளுவண்டிகளில் கடை நடத்தி வருகின்றனர். அவற்றை அப்புறப்படுத்தி ஏற்கனவே கடை நடத்தி யவர்களுக்கு மீண்டும் கடை வழங்க வேண்டும்.

நகர்மன்ற உறுப்பினர் ஆனந்தன்

பஸ் நிலையம் அருகே பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மாங்காய் மண்டி தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது. அதனை வேறு இடத்திற்கு மாற்றி அந்த இடத்தில் பூங்கா அமைத்து தர வேண்டும். ஏற்கனவே உள்ள பூங்காக்களை சீரமைத்து தர வேண்டும். நகர்மன்ற உறுப்பினர்

குணாளன்

எனது வார்டில் காய்கனி கழிவில் இருந்து தயாரிக்கப் படும் பயோ கேஸ் உள்ளது. இதை பயன்படுத்துவதால் சுற்றுப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றன. இதனால் இது கடந்த சில ஆண்டுக ளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுப்பகுதிகளில் அதிக வீடுகள் உள் ளதால் துர்நாற்றத்தை தவிர் க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது. கூட்டத் தில் நகர மன்ற உறுப்பினர் கள் அரசு அலுவலர்கள் கல ந்து கொண்டனர்.

# "வளர்ச்சித் திட்டங்களை அரசியல் ஆக்காதீர்கள்" — தவெக அரசுக்கு டிஆர்பி ராஜா அறிவுரை

சென்னை, ஆக.30-

பரந்தூர் விமான நிலைய திட்டம் மற்றும் உலகளாவிய விளையாட்டு நகரம் திட்டங்கள் ரத்து செய்யப்பட்டது குறித்து கருத்து தெரிவித்துள்ள திமுக முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, 'தயவு செய்து வளர்ச்சித் திட்டங்களை அரசியலாக்காதீர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த வாரத்தில் நிகழ்ந்த இரண்டு சம்பவங்கள் தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு எதிர்காலம் குறித்த ஒரு செய்தியை உணர்த்துகின்றன.

பரந்தூர் விமான நிலையம்: ஒப்புதல்கள் பெறப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், இத்திட்டம் இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. மீண்டும் புதிய இடத்தைத் தேடும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய விளையாட்டு நகரம் (Global Sports City): அடிக்கல் நாட்டப்பட்டு, ஒப்பந்தம் வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகளைத் தொடங்க தயாராக இருந்த நிலையில், இப்போது அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மீண்டும் வடிவமைக்க வேண்டிய



சூழல் உருவாகியுள்ளது.

திட்டங்களை மறுபரிசீலனை செய்ய அரசுகளுக்கு முழு உரிமை உண்டு என்பதை மறுக்க முடியாது. ஆனால், அவற்றை மீண்டும் புதிதாகத் தொடங்குவது என்பது எவ்விதச் செலவும் இல்லாத ஒன்றல்ல. ஒவ்வொரு முறை திட்டத்தை மாற்றியமைப்பதால் கால விரயம், ஒப்பந்தச் சிக்கல்கள், செலவு அதிகரிப்பு மற்றும் உள்கட்டமைப்புப் பணிகளில் தாமதம் ஆகியவற்றுக்கு வழி வகுக்கும்.

தேவைக்கு முன்பே திட்டமிட்டு, விரைவாகச் செயல்படுத்தக் கற்றுக்கொண்டதால்தான் தமிழ்நாடு இந்தியாவின் உற்பத்தித் துறையின் மையமாகத் திகழ்கிறது.

பெரிய கனவுகளைக் காண்பதும், திட்டங்களை மேம்படுத்துவதும், பிரம்மாண்டமாக உருவாக்குவதும் வரவேற்கத்தக்கதே. ஆனால், ஒவ்வொரு முறையும் திட்டத்தை ஆரம்ப நிலையிலிருந்தே மீண்டும் வடிவமைக்கத் தொடங்கும் நிலையைத் தமிழ்நாட்டால் தாங்கிக்கொள்ள முடியாது. தயவுசெய்து வளர்ச்சித் திட்டங்களை அரசியலாக்காதீர்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161